ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2451/19 - 2025 අගෝස්තු මස 27 වැනි බදාදා - 2025.08.27

*2451/19 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

ச.வ. பி 6/ 2017

**2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைச் சட்டம்**

**9 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் அல்லது அதிகாரத்தைக் கொண்டு. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர், பிமல் நிரோஷன் ரத்நாயக்க ஆகிய நான், (மூன்றாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட) "வானியல் வாய்ப்பு நலன்கள் மற்றும் அதனோடு இணைந்ததான நிலங்கள்" என்ற தலைப்பின்கீழான 2017, திசெம்பர் 21 ஆந் திகதிய 2050/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை பின்வருமாறு இக்கட்டளைமூலம் திருத்துகின்றேன்:

(அ) "5". ஆம் விடயத்துக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலம்:-

"5. பிதுருதலாகலை மலையில் அமைந்துள்ள ரேடார் நிலையமும் அதன்மீதுள்ள கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் அத்துடன் அதனோடு இணேந்த காணியும் பின்வருமாறு இருத்தல் வேண்டும் -

மத்திய மாகாணத்தின், நுவரெலியா மாவட்டத்தில் மத்துரட்ட பிரதேச செயலாளர் பிரிலில் 512 B என்னும் இலக்க மந்தாரம்நுவர கிராம அலுவலர் பிரிவினுள் அமைந்துள்ளதும் நிலஅளவையாளர் தலைமையதிபதியினால் ஆக்கப்பட்ட 2024.11.27 ஆந் திகதிய 330489 ஆம் இலக்க கடத்திரல் வரைபடத்தில் விவரிக்கப்படும் காணிதிதுண்டு இல. 02 இன் துண்டு இல. 01 ஆனவாறாக அடையாளமிடப்பட்டதுமான எல்லாம் பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு. பூச்சியம் தசம் நான்கு எட்டு எட்டு

எட்டு ஹெக்டேயர்கள் (0.4888 ஹெ.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் சொல்லப்பட்ட துண்டு இல. 01 வடக்கில் முதன்மை வரைபட இல. 2308 இன் துண்டு இல. 33, கிழக்கில் முதன்மை வரைபட இல. 2308 இன் துண்டு இல. 33, தெற்கில் முதன்மை வரைபட இல. 2308 இன் துண்டு இல. 33 மற்றும் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மேற்கில் முதன்மை வரைபட இல. 2308 இன் துண்டு இல. 33 மற்றும் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவு என்னும் எல்லைகளையும் கொண்டுள்ளது.":

(ஆ) "6" ஆம் விடயத்துக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலம:-

"6. நுவரெலியா மாவட்டத்தில் பிதுருதலாகலையில் அமைந்துள்ள காணியின் மீதான எவையேனும் கட்டமைப்புகள் அல்லது அதனோடிணைந்தவை உட்பட விமான பணியாட்டொகுதிக்கான ஓய்வு விடுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளவிடத்து, பின்வருமாறு இருத்தல் வேண்டும் -

மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியாவின் ஹவாஎலிய மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 535 F என்னும் இலக்க, கிராம அலுவலர் பிரிவினுள் அமைந்துள்ளதுமான நில அளவையாளர் தலைமையதிபதியினால் ஆக்கப்பட்ட 2024/11/27 ஆந்தேதிய 330184 ஆம் இலக்க கடத்திரல் வரைபடத்தில் விவரிக்கப்படும் காணித்துண்டு இல. 02 இல் துண்டு இல. 01 என்றவாறாக அடையாளமிடப்பட்டதும், எல்லாம் பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணிதிதுண்டு, பூச்சியம் தசம் ஐந்து எட்டு ஒன்று நான்கு ஹெக்டேயர் (0.5814 ஹெ) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் சொல்லப்பட்ட துண்டு இல. 01 வடக்கில் முதன்மை வரைபட இல. 2289 இன் துண்டு இல. 23 மற்றும் 330184 கடத்திரல் வரைபடத்தின் காணித்துண்டு இல. 02 இன் துண்டு இல. 02, கிழக்கில் 330184 கடத்திரல் வரைபடத்தின் காணித்துண்டு இல. 02 இன் துண்டு இல. 02, தெற்கில் பேண்டர் ஹோம் பண்ணை மற்றும் மேற்கில் பேண்டர் ஹோம் பண்ணை மற்றும் முதன்மை வரைபட இல. 2289 இன் துண்டு இல. 23 என்னும் எல்லைகளையும் கொண்டுள்ளது.".

**பிமல் நிரோஷன் ரத்நாயக்க,**
போக்குவாத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்
மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
2025, ஓகத்து 25.

EOG 08 - 0282

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.